# கழக பொதுக்குழு தீர்மானம்!... 

6 -ஆம் பக்கத் தொடர்ச்சி

அதுமட்டுமின்றி, கடந்த வணிகர் நாளின்போது நடைபெற்ற வணிகர் கோரிக்கை பிரகடன மாநாட்டில், ஏற்கெனவே தலைவர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டது போல், தமிழ்நாட்டில் உள்ள கடைகளின் பெயர்ப் பலகைகளில் தமிழ் இடம்பெற வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்துள்ளார்.

எனவே, தமிழை வளர்க்கவும், தமிழினத்தைக் காக்கவும், தமிழ் நாட்டைப் பேணவும், இனிவரும் காலங்களில் தமிழர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்குத் தமிழில் பெயர்களைச் சூட்டவும் - வணிகப் பெருமக்கள் தமிழ்நாட்டில் உள்ள கடைகளின் பெயர்ப் பலகைகளில் தமிழில் பெயர் எழுதவேண்டும் எனவும் இப்பொதுக்குழு அனைவரையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் : 26**

**அ.தி.மு.க. ஆட்சியின் அவலமான பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு வரவேற்பு!**

தமிழ்நாட்டை மட்டுமின்றி இந்தியா முழுவதையும் அதிர வைத்த அ.தி.மு.க ஆட்சிக் காலத்தின் பொள்ளாச்சி பாலியல் குற்றங்கள் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய களங்கமாகும். இளம்பெண்களைச் சீரழித்த குற்றவாளிகள் அ.தி.மு.க.வில் பொறுப்பில் இருந்த நிலையில், அவர்களை அ.தி.மு.க அரசு காப்பாற்ற முயன்ற நிலையில், தி.மு.க.வும் மற்ற கட்சிகளும் போராட்டம் நடத்தின. பழனிசாமி அரசு, கண்துடைப்பு விசாரணை நடத்திய நிலையில், கழகமும் மற்ற அமைப்பினரும் முன்னெடுத்த கடும் போராட்டத்தின் விளைவாகவே சி.பி.ஐ. விசாரணைக்கு இவ்வழக்கு சென்றது. அப்போது எதிர்க் கட்சித்தலைவராக இருந்த நமது கழகத் தலைவர் அவர்கள், "நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு இதில் நிச்சயம் நியாயம் கிடைக்கும்" என உறுதி அளித்தார். கழக ஆட்சி அமைந்ததும் சி.பி.ஐ விசாரணைக்குத் தமிழ்நாடு அரசின் தரப்பில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டு, தற்போது பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை சிறைத் தண்டனை என்கிற தீர்ப்பு வழங்கப்பட்டு, நீதி நிலை நாட்டப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கு மொத்தம் ரூபாய் 85 இலட்சம் 'மாவட்ட சட்ட உதவி மையம்' மூலம் நிவாரணத் தொகை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக ஒவ்வொருவருக்கும் அரசு சார்பில் ரூ. 25 இலட்சம் வழங்கப்படும் என உத்தரவிட்டுள்ளார். அ.தி.மு.க. ஆட்சியில் அந்தக் கட்சியினரின் ஆதரவுடன் நடந்த பொள்ளாச்சி இளம்பெண்கள் பாலியல் வழக்கின் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்பை இந்தப் பொதுக்குழு பெரிதும் வரவேற்பதுடன், அந்த நீதியைப் பெறுவதில் உறுதியாக இருந்து, பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ. 25 இலட்சம் கூடுதலாக வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மனித நேய நடவடிக்கைக்கும்;

சென்னையில் மாணவி ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, தன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள காவல் துறை மூலம் விரைந்து விசாரணை நடத்தி, ஐந்தே மாதங்களில் நீதியைப் பெற்று தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் - தமிழ்நாடு காவல்துறைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தப் பொதுக்குழு, பாராட்டுகளையும் - நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் : 27**

**வஞ்சக பா.ஜ.க.வையும் துரோக அ.தி.மு.க.வையும் விரட்டியடித்து 2026-இல் கழக ஆட்சி தொடர களப்பணியைத் தொடங்குவோம்!**

ஒரு கையில் வாளும் மற்றொரு கையில் கேடயமும் ஏந்திப் போர்க்களம் காணும் தளபதியாக நம்முடைய கழகத் தலைவர், மாநில உரிமைகளுக்காக ஒன்றிய அரசுக்கு எதிரான சட்டப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திய படியே, தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி, இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் ஜனநாயகக் காவலராக விளங்கு வதுடன், இந்தியாவில் வேறெந்த மாநிலமும் நிறைவேற்றிடாத முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக முன்னிறுத்தி வரும் நிலையில், தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய நிதி, வரி வருவாய் உள்ளிட்ட அனைத்தையும் முறையாக வழங்காமல் வஞ்சகம் செய்யும் ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.க.வையும், அதன் பாசிச-எதேச்சாதிகாரப் போக்கு அனைத்திற்கும் துணை போய், தன்னுடைய ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளை அடகு வைத்ததுடன், தற்போதும் அந்த வஞ்சகத்திற்கு முழுமையாகத் துணை போகும் அ.தி.மு.க.வையும் தமிழ்நாட்டு மக்கள் கடந்த தேர்தல்களில் தொடர்ந்து புறக்கணித்து வரும் நிலையில், எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் வஞ்சக பா.ஜ.க.வையும், துரோக அ.தி.மு.க. வையும் முழுமையாக விரட்டியடித்து, இந்தியாவின் ஜனநாயகக் காவலராம் நம் கழகத் தலைவர் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நல்லாட்சி தொடர்ந்திட அனைத்துத் தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெறக் கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகளும் இன்று முதல் தேர்தல் பணிகளை விரைவுபடுத்தி, அயராது பாடுபடுவோம்! தலைவரை மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர வைக்க இப்பொதுக் குழு சூளுரைக்கிறது!

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உடற்கல்வி, தையல் மற்றும் இசை ஆசிரியர்களுக்கு மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட தட்டச்சர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

### ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு

## உடற்கல்வி - தையல் - இசை ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணை!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

சென்னை, ஜூன் 3 - பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களால் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உடற் கல்வி, தையல் மற்றும் இசை ஆசிரியர்களுக்கு மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட தட்டச்சர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு உடற்கல்வி, தையல் மற்றும் இசை ஆசிரியர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 45 நபர்களுக்கு (33 உடற்கல்வி ஆசிரியர், 10 தையல் ஆசிரியர் மற்றும் 2 இசை ஆசிரியர்) பணி நியமன கலந்தாய்வு சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம் நடத்தப்பட்டது.

அக்கலந்தாய்வில் தங்களுக்கு விருப்பமான பணியிடங்களைத் தேர்வு செய்த 45 உடற்கல்வி, சிறப்பாசி ரியர்களுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 7 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (01.06.2025) மதுரை, கலைஞர் நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்கில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், பள்ளிக்கல்வி இணை. இயக்குநர் (பணியாளர் தொகுதி) முனைவர் த. இராஜேந்திரன், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள் விழாவை

## நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிக்கை!



நாமக்கல், ஜூன் 3 - முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர பேரூர் களில் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும் என மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி வேண்டுகோள் விடுத்து, அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ் இனத்தின் தலைவராக நவீன தமிழகத்தின் சிற்பி நம் நினைவில் வாழும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளினை முன்னிட்டு, இன்று ( 03.6.2025)நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர்களில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கழக மூத்த முன்னோடிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டும்,

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளினை சிறப்பாக கொண்டாடும் வகையில் நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் நலதிட்ட உதவிகள் வழங்கவும், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு, புத்தகம் வழங்குதல், மரக்கன்று நடுதல், ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்குதல், என பல்வேறு நலத்திட்ட உதவிகளை நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும் மேற்கொள்ள வேண்டும்,

மேலும் அனைத்து வார்டு, கிளைகளிலும் வழங்குகின்ற நலத்திட்ட உதவிகளின் புகைப்படங்களை மாவட்ட கழக அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் எழுச்சியோடு கொண்டாடுவோம்!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை, ஜூன்3 - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் தளபதி, கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வழிகாட்டுதல்களோடு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் எழுச்சியோடு கொண்டாடுவோம்என புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது,

"உலகம் முழுவதிலும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், மூத்த மொழியாம் தமிழ்மொழி செம்மொழி தகுதியைப் பெற்று இன்று பட்டொளி வீசி பறப்பதற்கும் காரணமாயிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை தலைமைக்கழகத்தின் வழிகாட்டுதல்களோடு ஜூன் 3ம் தேதி முதல் எழுச்சியோடு கொண்டாடப்படவிருக்கிறது

அந்த மகத்தான தலைவரின் 102வது பிறந்தநாளை இன்று (3.5.2025 ) புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்முழுவதிலும் மாவட்ட, மாநகர, ஒன்றிய , பேரூர், கிளை மற்றும் வார்டுகள், கழகங்கள் தோறும் கழக கொடி ஏற்றியும் , பொது மக்களுக்கு இனிப்புக்கள் வழங்கியும் சிறப்போடு கொண்டாடுவதோடு, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் , மாணவ மாணவி களுக்கு கல்வி கற்க உதவிகள் வழங்குதல் , விளையாட்டுப் போட்டிகள் , இலக்கிய போட்டிகளை நடத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளை, இந்த வருடம் முழுவதும் நடத்தி கலைஞர் எனும் மாமனிதரின் புகழ் பாடுவோம்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது பிறந்தநாள் செம்மொழி நாள் விழா !

## நாகை மாவட்டத்தில் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் என். கௌதமன் அறிக்கை!



நாகை, ஜூன் 3 - உலகெங்கும் வாழும் தமிழர்களின் காவல் அரணாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்நாளை செம்மொழி நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென நாகை மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன்.வேண்டுகோள் விடுத்து அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் தம் வாழ்நாளெல்லாம் கடுமையாக உழைத்து, தமிழர் வாழ்வில் வளமும், வலிமையும் சேர்க்கும் திட்டங்கள் பலவற்றை செயல்படுத்தி கல்வி, அறிவியல், தொழிற்நுட்பம், அரசியல், பொருளாதார, சமுதாய நிலைகள் அனைத்திலும் தலை சிறந்த மாநிலம் தமிழ்நாடு எனும் பெருமையை நமக்கு தேடித் தந்தார். உலகெங்கும் வாழும் தமிழர்களின் காவல் அரணாக தலைவர் கலைஞர் விளங்கிய நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான இன்று (ஜூன் - 3) செம்மொழி நாளான இன்று காலை 7.00மணியளவில் அவர்களின் திருவுருவ சிலைமற்றும்திருக்குவளையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலைமாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது. அதைத் தொடர்ந்து 8.30 மணி அளவில் நாகையில் உள்ளமாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் நம் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப் பட உள்ளது. இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடி கள், கிளை. வார்டு கழகநிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துக் கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

மேலும் கிளை, வார்டுகளில் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, இனிப்பு வழங்கியும் . கழகத்தின் இருவர்ண கொடி யேற்றிட வேண்டும் என்றும். இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் செய்திடுவதோடு ஜூன் மாதம் முழுவதும் ஏழை - எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா உள்ளிட்ட எழுது பொருட்களை வழங்கியும், ஆதரவற்றோர் இல்லம், முதியோர் இல்லம், அரசு மருத்துவமனைகளில் நலத் திட்ட உதவிகளையும், ரத்ததான முகாம், மருத்துவ முகாம், கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டங்கள், தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும் கலைஞர் பிறந்தநாள் விழாவை சிறப்பாக எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.இவ்வாறு தனது அறிக்கையில் நாகை மாவட்ட கழக செயலாளர் எம் கௌதமன் கூறியுள்ளார்.

## தி.மு.க. பொறியாளர் அணி - வர்த்தகர் அணி - நெசவாளர் அணி - அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி - வர்த்தகர் அணி - நெசவாளர் அணி - அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (04-06-2025 - புதன் கிழமை), மாலை 4.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பொறியாளர் அணி - வர்த்தகர் அணி - நெசவாளர் அணி - அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள் : 02-06-2025.

**திருச்சி சிவா, எம்.பி.,**
துணைப் பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### முத்தமிழறிஞர் செம்மொழி நாயகர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## கோவை தெற்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

### மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் வேண்டுகோள்!



கோவை, ஜூன் 3 - முத்தமிழறிஞர் செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவிப்பின்படி கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக பகுதிகளில் சிறப்பாக கொண்டாட வேண்டுமென கோவை மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அறிக்கை வருமாறு :- தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட மாமனிதர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியன்; தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர், ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு காலப் பங்களிப்பாளர், அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர், களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர், இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளைகழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், அன்புத் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி இன்று (03.06.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 8.00 மணியளவில் கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி புகழ் வணக்கம் செய்திடவும், காலை 9.00 மணியளவில் கோவை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் சூலூர் சட்டமன்ற தொகுதி கணியூர் கருமத்தம்பட்டியில் அமைந்துள்ள நூலகத்துடன் கூடிய முத்தமிழறிஞர், செம்மொழி நாயகர், கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கோவை தெற்கு மாவட்ட நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழகச் செயலாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA2 பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.